பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

Registered as a Newspaper பக்கங்கள்: 4 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆனி 09 | 23-06-94 | வியாழக்கிழமை | ஓசை 125

## சிறுவர்களை வேலைக்கமர்த்தும் நிறுவனங்கள் மீது நடவடிக்கை

சர்வதேச சுதந்திர தொழிற் சங்கங்களின் சம்மேளனம் உலகளாவிய ரீதியில் சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப் படுவதை முற்றாக ஒழித்துக்கட்டவென இயக்கம் ஒன்றினை ஆரம்பித்துள்ளது. இதன்படி இனிமேல் சிறுவர்களை தொழிலில் ஈடுபடுத்தியுள்ள சகல நிறுவனங்களும் கண்டுபிடிக்கப்பட்டு அவற்றிற்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மேற்படி சம்மேளனம் எச்சரித்துள்ளது. இந் நிறுவனம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெற்காசியாவிலும், லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் 15 வயதுக்குக் குறைந்த சுமார் 20 கோடிக்கு மேலான சிறுவர்கள் அல்லது குழந்தைகள் வீதிகளிலும் (4ஆம் பக்கம் பார்க்க)

# பாராளுமன்றம் நாளை கலைக்கப்படலாம்

# ஆகஸ்ட் மாதத்தில் பொதுத் தேர்தல்

## அகதிமுகாமிலிருந்த தமிழர்கள் மீது பாதுகாப்பிற்கு நின்ற பொலிஸ் தாக்கு

(வவுனியா)

வவுனியா ரயில் நிலைய தற்காலிக அகதிமுகாமில் உள்ள தமிழர்கள் மீது அங்கு ''பாதுகாப்பிற்காக'' இருந்த மூன்று சிறிலங்கா பொலிசார் தாக்குதல் நடாத்தியுள்ளனர். பொலிசாரால் கைது செய்யப்பட்டுக் கொண்டு செல்லப்பட்ட ஒருவர் பின்னர் விடுவிக்கப்பட்டார். இச் சம்பவம் கடந்த 14-ம் திகதி நடைபெற்றுள்ளது.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது; கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டப முகாமிலிருந்து வவுனியா ரயில் நிலைய தற்காலிக முகாமிறகு இடமாற்றப் பட்ட அகதிகளில் ஒருவரை அங்கு நிறுத்தப்பட்டிருந்த மூன்று பொலிசார் தாக்கியுள்ளனர். இது குறித்து அங்கிருந்த சிலர் கேள்வி கேட்ட போது அவர்கள் மீதும் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தின் பின்னர் சிறிகணநாதன் என்பவரை கைது செய்துமுகாம்கொண்டு சென்றபின் விடுவித்தனர்.

## அனுப்பப்படும் அகதிகளின் பாதுகாப்பு குறித்து பேச்சு

(ஜெனீவா)

சுவிற்சர்லாந் திலிருந்து இலங்கை அகதிகளை திருப்பியனுப்பும் திட்டம் குறித்து நேற்றுயூ.என்எச்.சீ ஆர் அதிகாரிகள் ஜெனீவாவில்ஐரோப்பாவின் அகதிகள் நலன்காக்கும் குழுக்களை சந்தித்துப் பேசினர். இதுபோன்று இரு கலந்துரையாடல்கள் ஏற்கனவே நடந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

திருப்பியனுப்பப்படும் அகதிகள் இலங்கையை சென்றடையும் போது அவர்களது பாதுகாப்பு மற்றும் அரசினால் அவர்கள் நடத்தப் படும்முறை குறித்து ஐ நா.

## வீடு கட்ட ஹமீர்டனுக்கு 2கோடி கிடைத்ததுஎப்படி

## ஜனாதிபதிடி.பி.விஜேதுங்க திடீர் முடிவு

[கொழும்பு]

சிறிலங்கா பாராளுமன்றம் நாளை வெள்ளிக்கிழமை இரவு கலைக்கப்படலாம் என செய்திகள் தெரிவிக்கின்றன. தற்போதைய பாராளுமன்றத்தின் ஆயுட் காலம் 1995 பெப்ரவரி மாதம் வரையிலும் இருப்பினும், பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டு பொதுத் தேர்தலை ஆகஸ்ட் மாதத்தில் நடத்த டி. பி. விஜேதுங்கா முடிவு செய்துள்ளார் என்றும், அதற்கான பூர்வாங்க நடவடிக்கையில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா இறங்கி விட்டதாகவும் ஜனாதிபதி செயலக வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

பாராளுமன்றம் கலைப்பு தொடர்பான அறிவிப்பானது உத்தியோகபூர்வமாக விடுக்கப்படவில்லை என்றாலும், எந்த வேளையிலும் விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இதனை எதிர்பார்க்கலாம் எனவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் பொதுத் தேர்தல், ஆகஸ்ட் மாதத்தில் 5 ஆம் திகதிக்கும் 19ஆம் திகதிக்கும் இடையில் நடைபெறலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி விஜேதுங்காவிற்கு மக்களிடையே செல்வாக்கு இல்லை என ஐ. தே. கவே கருதுவதாலும், எதிர்க்கட்சிகள் பாராளுமன்ற கலைப்பை எதிர்பார்க்கவில்லை என்பதாலும் அதிரடியாக பாராளுமன்றத் தேர்தலை முதலில் நடத்தி விட ஐ. தே.க. திட்டமிடப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

சென்ற வாரம் நடைபெற்ற அமைச்சரவை மாற்றத்தைத் தொடர்ந்து ஆகக் குறைந்தது மேலும் ஆறு மாதமாவது பாராளுமன்றத்தை நீடிக்கவே ஆரம்பத்தில் முயற்சி மேற்கொள்ளப் பட்டபோதும், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட கட்சி அரசியல் மாற்றம் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா இவ் அவசர முடிவை எடுக்க காரணமாக அமைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## எதிர்க்கட்சியின்குழப்பத்தை டி.பி பயன்படுத்த திட்டம்

(கொழும்பு)

எதிர்க்கட்சியான சுதந்திரக் கட்சி தலைமை யாருக்கு என்று எந்த முடிவும்இதுவரை

பாராளுமன்றத் தேர்தலை எதிர்க்கட்சியின் குழப்பநிலையினுள் எவ்வளவு விரைவாக நடத்த முடியுமோ அவ்வளவு

## இலவச அரிசி வழங்க

# வீடு கட்ட ஹமில்டனுக்கு 2கோடி கிடைத்தது எப்படி

## பாதுகாப்பு அதிகாரிகள் கேள்வி

(கொழும்பு)

ஊழல், வீண்விரயம் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவிடம் பாதுகாப்பு படையில் உள்ள சில உயர் அதிகாரிகள் சமர்ப்பித்துள்ள மகஜரில் பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

1988 வரை தனது வீட்டைக் கட்டி முடிப்பதற்கு கூட பணமில்லாமல் இருந்த ஹமில்டன் வனசிங்கா தற்போது இரண்டுகோடி ரூபாவுக்கு அதிகமாக சம்பாதித்திருப்பது எப்படி? என்று அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

...கள் இலங்கையை ... டையுபோது அவர்களது பாதுகாப்பு மற்றும் அரசினால் அவர்கள் நடத்தப்படும்முறை குறித்து ஐ நா. விடம் இருந்தும் சுவிஸ் அரசிடமிருந்தும் பாதுகாப்பு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு சிப்பாய் பலி

(கொழும்பு)

கடந்த சனியன்று ஊர்காவற்றுறையில் விடுதலைப் புலிகளுடனான மோதலில் இராணுவச்சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாக கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

### கனேடிய சட்டத்தரணி இனப் பிரச்சினை குறித்து

# ஆசிய பசுபிக் தென்பிராந்திய பிரிவு இயக்குநருடன் ஆலோசனை கலப்பு

(ஒட்டாவா)

இலங்கை இனப் பிரச்சினை குறித்து அக்கறை எடுத்து வரும் கனேடிய சட்டத்தரணி மாக்ஸ் பேர்கர் தமிழர் பிரச்சினை தொடர்பாக ஆசிய பசுபிக் தென்பிராந்திய பிரிவு இயக்குநருடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

சமாதான நிலையை இலங்கையில் தோற்றுவிப்பது தொடர்பாக இருவரும் ஒட்டாவாவில் பேச்சுக்களை நடத்தினர்.

மாக்ஸ் பேர்கர் ஏற்கனவே இலங்கையில் நிலவும் இனப் பிரச்சினையை முடிவிற்கு கொண்டுவரும் வகையில் ஆக்க பூர்வமான முறையில் அரசுடன் பேச்சு வார்த்தைகளை மேற் கொள்ளுமாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான திரு தொண்டமானை கடிதம் மூலம் கேட்டிருந்தும் தெ ந்ததே.

## மகாபொல புலமைப்பரிசில் 1250 ரூபாவாக அதிகரிப்பு

(கொழும்பு

மகாபொல புலமைப் பரிசில் கொடுப்பனவு 250 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது இதன்படி இதுவரை 1000 ரூபாவாக இருந்த கொடுப்பனவு 1250ரூபாவாக அதிகரித்துள்ளது எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி தெ

(4 ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்காவிற்கு ஐரோப்பிய விமானசேவைகள் பல ரத்து

### உல்லாசப்பயணிகள் வருகை வீழ்ச்சியின் எதிரொலி

(கொழும்பு)

ஐரோப்பிய உல்லாசப் பயணிகள் சிறிலங்கா வருவது குறைந்துள்ளதையடுத்து பல ஐரோப்பிய விமான சேவைகள் தமது சிறிலங்காவிற்கான போக்குவரத்தை ரத்துச் செய்துள்ளன.

சுவிஸ், பிரிட்டிஷ், கொரிய, நேபாள விமானசேவைகள் ஏற்கனவே நிறுத்தப்பட்டுள்ளன. நவம்பர் முதல் பிரான்ஸ் விமானசேவையும் நிறுத்தப் படவுள்ளது.

கொழும்பில் உல்லாசப் பயணிகள் விடுதியில் ஏற்பட்ட குண்டுவெடிப்புச் சம்பவங்களும், எல்லாளன்படையினரால் உல்லாசப்பயணிகளுக்கு விடுக்கப்பட்ட அறிவிப்புமே இவ்வீழ்ச்சிக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

## டி.பி பயன்படுத்த திட்டம்

(கொழும்பு)

எதிர்க்கட்சியான சுதந்திரக் கட்சி தலைமையாருக்கு என்று எந்த முடிவும் இதுவரை எடுக்கவில்லை. தலைமை சிறிமாவோ பண்டாரநாயக்காவிடம் இருப்பினும் தேர்தலை முன் நடத்திச் செல்ல சந்திரிக குமாரணதுங்காவே நியமிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் பாராளுமன்றத் தேர் தலை எதிர்க்கட்சியின் குழப்பநிலையினுள் எவ்வளவு விரைவாக நடத்த முடியுமோ அவ்வளவு விரைவாக நடத்தவே ஜனாதிபதி விஜேதுங்கா முயற்சிப்பது போல்தெரிகிறது. இவ்வாறு சிறிலங்கா பாராளுமன்றம் கலைக்கப்படலாம் என்ற

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# எந்தத் தேர்தலுக்கும் எமது கட்சி தயார்

### சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

எந்த ஒரு தேர்தலையும் சந்திக்க தான் தயாராக இருப்பதாக மேல்மாகாண முதல் அமைச்சரும், பொது ஜன ஐக்கிய முன்னணியின் முக்கிய தலைவர்களில் ஒருவருமான சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார்.

எந்தத் தேர்தலை எதிர் கொள்வதற்கும் சுதந்திரக் கட்சியின் சார்பிலும் பொது ஜன ஐக்கிய முன்னணியின் சார்பிலும் சகல முடிவுகள் எடுப்பதற்கு தன்னிடம் தற்போது சிறிமாவோ பண்டாரநாயக்காவினாலும், ஏனைய கட்சித் தலைவர்களினாலும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள

(4 ஆம் பக்கம் பார்க்க)

### வீரச்சாவு



லெப். கதிரவன் (கோபு)

விளான் பகுதியில் நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினருடன் இடம் பெற்ற எதிர்பாராத மோதலில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இலவச அரிசி வழங்க அரசாங்கம் திட்டம்

(கொழும்பு)

மூவாயிரம் ரூபாவுக்கு குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தினருக்கு வாராந்தம் இலவச அரிசியை வழங்குவது குறித்து ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா ஆராய்ந்து வருகின்றார்.

இவ் வருமானத்திற்கு குறைந்த ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்தினருக்கு வாராந்தம் ஐந்து கிலோ அரிசி வழங்கப்படஇருப்பதாகவும் இது தொடர்பாக ஜனாதிபதி மாளிகையில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது எனவும் கூறப்படுகிறது.

இதன்போது ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுடன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. க.வை ஆதரிப்பதா? இ.தொ.கா விரைவில் முடிவு

எதிர்வரும் தேர்தல்களில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஐக்கிய தேசிய கட்சியை ஆதரிப்பதா? இல்லையா? என்பது குறித்து இறுதி முடிவு விரைவில் எடுக்கப்பட இருப்பதாக இ. தொ. கா உப தலைவர் எஸ். ராஜரட்ணம் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் இரண்டாம் திகதி கண்டியில் நடைபெறும் கட்சியின் விசேட கூட்டத்திலே இது தொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்க ஐ.தே.க. பொதுமக்களை அழைக்கிறது

### ஐந்து லட்சம் சன்மானம் வழங்கவும் முடிவு

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தல்களையொட்டி ஐ. தே. க. தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரிக்க பொதுமக்களுக்கும் அழைப்புவிடுத்துள்ளது. இத் தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரிக்க உதவும் பொதுமக்களுக்கு ஐ. தே. க. 5 லட்சம் ரூபா சன்மானம்வழங்கப்படும் எனவும் அறிவித்துள்ளது.

கடந்த மார்ச் மாத தென் மாகாணசபை தேர்தலில் ஐ. தே. க. படுதோல்வி கண்டதையடுத்தே புதிய தேர்தலை எதிர்கொள்ளும்போது மக்கள் முன்வைக்கும் தேர்தல் ... கொண்ட அறிக்கையை தயாரிக்க பொதுமக்களின் உதவியை நாடியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## 500 பொலிஸ் அதிகாரிகள் தேர்தலுக்காக தெரிவு

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தல்களின் போது கடமையில் ஈடுபடுத்துவதற்காக நாடு பூராவும் இருந்து ஐந்நூறு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் தெரிவு செய்யப்படவேண்டும் என தேர்தல் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

சப் இன்ஸ்பெக்டர் தரத்திலான பொலிஸ் சிரேஷ்ட அதிகாரிகள் தொடர்பாக முழுமையாக விபரங்கள் தற்போது பெற்றுக் கொள்ளப்படுவதாகவும் இவர்களின் அரசியல் நிலை தொடர்பாக இரகசியப் புலன் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் தெரியவருகின்றது.

## 40 தமிழர் கைது

பம்பலப்பிட்டி உணவு விடுதியில் பணியாற்றிய 40 தமிழர்கள் கடந்த ஞாயிறன்று பொலிசாரால் கைது செய்யப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வெள்ளிப் பாதசரம்

இந்த நூற்றாண்டிற்கான ஈழத்துச் சிறுகதைத் தொகுப்பு. விற்பனையாகிறது: வசந்தம், தமிழ்த்தாய் புத்தகசாலைகளில். [8569

### SLEAS

அதிபர், SLEAS பரீட்சைகளுக்குரிய நுண்ணறிவு, கிரகித்தல், பொதுவிவேகப் பயிற்சிகள், ஆய்ந்தறிதல் திறன். கிரகித்தல் ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன. -கலாநிதி க. குணராசா. எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (8617)

## சைக்கிள்கள் கண்டெடுப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் கடந்த ஒரு மாத காலத்திற்குள் பொது இடங்களில் இரு சைக்கிள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன,

சாவகச்சேரி காவல் துறையினரால் .கடந்த மாதத்தில் இரு துவிச்சக்கரவண்டிகள் கண்டு எடுக்கப்பட்டு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர்கள் தகுந்த ஆதாரங்களை காட்டி மன்றில் பெற்றுக்கொள்ளலாம் என நீதியாளர் திரு. பூவேந்தன் தெரிவித்துள்ளார். (86)

## கருத்தரங்கு

உலக சூழல் தினத்தை முன்னிட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் கோட்ட ரீதியாக கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன. இந்தவகையில்கடந்தமுதலாம் திகதியன்று வடமராட்சி கோட்டத்தில் அல்வாய் சின்னத்தம்பி மகாவித்தியாலயத்திலும் இரண்டாம் திகதியன்று தென்மராட்சியில் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்திலும் மூன்றாம் திகதியன்று தீவகக்கோட்டம் வலிகாமம் கோட்டத்தில் மருதனார்மடம்இராமநாதன்கல்லூரியிலும், நான்காம் திகதியன்று தீவகக் கோட்ட கெற்புலி பண்டிதர் குடியிருப்பரங்கிலும் கருத்தரங்குகள் நடைபெற்றன. இக்கருத்தரங்கில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், மாணவர்கள், ஆசிரியர்கள், …

## வங்கிக்கடன் திட்டம் பற்றி சன்மார்க்கசபைகருத்தரங்கு

குரும்பசிட்டி சன்மார்க்க சபை அபிவிருத்திசார் வங்கிக்கடன் திட்டங்களும் கிராமிய நிறுவனங்களும் என்ற தலைப்பில் கருத்தரங்குத் தொடர் ஒன்றை நடாத்த முன்வந்துள்ளது. இதன் முதலாவது தொடர் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மருதனார் மடத்திலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தில் சபைத்தலைவர் திரு.தி.குகானந்தன் தலைமையில் இடம் பெறும்.

இவ் அமர்வில் சுன்னாகம் இலங்கை வங்கிக் கடன் பகுதியினர் கலந்து கொள்ளவுள்ளனர். இலங்கை வங்கி யாழ். பிரதேச முகாமையாளர் திரு கே. கணேசமூர்த்தி தொடக்கவுரை நிகழ்த்த வங்கிக் கடன் பற்றிய அறிமுகத்தை சுன்னாகம் இலங்கை வங்கி முகாமையாளர் எஸ். விக்னராஜாவும், கடன் பகுதி உத்தியோகத்தர் திரு.என். சிவரத்தினம், அபிவிருத்திக் கடன் திட்டங்கள் பற்றியும் இலங்கை வங்கி யாழ் மாவட்டக் கடன் அதிகாரி திரு.என். சச்சிதானந்தன் அபிவிருத்தி சார் வங்கிக்கடன்களை மக்களிற்குப்பெற்றுக் கொடுப்பதில் கிராமிய நிறுவனங்களின் பங்கு என்ற தலைப்பிலும் கருத்துரைகள் வழங்குவர். வலி.வடக்கு பிரதேசச் செயலர் திரு.நா. வேதநாயகன் நிறைவுரை நிகழ்த்துவர்.

## வங்கியின் அடகு மீளல் பகுதி தொடர்ந்து இயங்குகிறது

(கொழும்பு)

கொழும்பு மருதானையில் இயங்கி வரும் மக்கள் வங்கி அடகு மீளல் பகுதியின் வேலைகள் மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. இக் கிளையின் வேலைகள் இம் மாதம் 30-ம் திகதியுடன் மூடப்பட இருந்தது தெரிந்ததே. மேலும் நீடிக்கப்பட்ட காலத்தினுள் யாழ்ப்பாண மக்கள் வங்கிக் கிளைகளில் முன்னர் நகைகளை அடகு வைத்தவர்கள் தமது அடகுப் பொருட்களை மீட்டுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## உலக சைவத்தமிழர் மாநாடு பாரிசில் நடத்த ஏற்பாடு

உலக சைவப் பேரவையின் மூன்றாவது சைவத் தமிழ் மாநாடு பாரிஸ்நகர் சித்தி விநாயகர் ஆலய மண்டபத்தில் எதிர்வரும் சனி, ஞாயிறு கிழமைகளில் நடைபெறவுள்ளது.

இம் மாநாட்டில் பிரான்ஸ் இங்கிலாந்து. தமிழ்நாடு மலேசியா, தென் ஆபிரிக்கா' சிங்கப்பூர், மொறீசியஸ் உட்பட பலநாடுகளையும் சேர்ந்த அறிஞர்கள் பங்குபெற்றுகின்றனர்.

மாநாட்டிற்கான அனைத்து ஏற்பாடுகளையும், உலக சைவப் பேரவையின் பாரிஸ் கிளையும், பாரிசில் இருந்து வெளியாகும் 'தமிழன்' பத்திரிகையும் இணைந்து மேற்கொண்டுள்ளன.

## பரிசளிப்பு விழா

(தென்மராட்சி)

யா/ எழுது மட்டுவாழ் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் 'வருடாந்த பரிசளிப்பு விழா நாளை பாடசாலையின் அதிபர் திரு. ஐ. சின்னையா தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இதற்கு பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்விக் கோட்ட பிரதிக் கல்வி பணிப்பாளர் திருமதி புஸ்பா கணேசலிங்கம் அவர்களும், விசேட …

## நீர் இறைக்கும் இயந்திரங்கள் திருட்டு

(பருத்தித்துறை)

வடமராட்சிகிழக்குப் பகுதியில் உள்ள அம்பன், குடத்தனைக் கிராமங்களில் விவசாயிகளின் நீர் இறைக்கும் இயந்திரங்கள் இரவு வேளைகளில் திருடப்பட்டுவருவதாக நாகர்கோவில் தமிழீழ காவல் துறையில் விவசாயிகள் புகார் செய்துள்ளனர். திரு.வி. கார்த்திகேசு, திரு க. முருகுப்பிள்ளை, திரு.ந. கார்த்திகேசு திரு.ச. சிவசுப்பிரமணியம் ஆகிய நான்கு விவசாயிகளினது நீர் இறைக்கும் இயந்திரங்களும் தோட்டங்களில் வைத்து இரவு வேளையில் திருடப்பட்டுள்ளதாகப்புகார் செய்யப்பட்டுள்ளது. இந் நீர் …

## ஆளுமையை வளர்ப்பதால் சமூகம் பயனடையும்

**- விரிவுரையாளர் நந்தகுமாரன்**

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக மாணவர்களுடைய ''ஆளுமையை வளர்த்தெடுப்பதும் வளர்ந்து வருகின்ற எமது சமுதாயத்திற்கு அவசியம் தேவைப்படுகின்ற சமூக விஞ்ஞானிகளின் பங்கை அளிப்பதாகும். இந்த வகையில் உருவாக்கப்பட்டதே நமது 'சமூக விஞ்ஞான மன்றம்' ஆகும். இதன் ஊடாக மாணவர்களது வாசித்தல், கிரகித்தல், வடிவமைத்தல், ஆய்வறிதல், எழுதுதல் என்ற பல திறன்களை வளர்க்கக் கூடியதாய் இருக்கின்றது.

இவ்வாறு யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட பொருளியல் துறை விரிவுரையாளர் இ. நந்தகுமாரன் தெரிவித்தார். யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற ''சமூகஒளி'' நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு பேசிய நந்தகுமாரன் மேலும் கூறுகையில்,

பூரணமான மனித சமுதாயம் ஒன்று உருவாக வேண்டுமெனில் விளையாட்டு, கலை போன்ற நிகழ்வுகளோடு மாணவர்கள் சமூக விஞ்ஞான நிகழ்ச்சிகளிலும் பங்கு கொள்ள வேண்டும் என்றார்.

யாழ். பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றத் தலைவர் ச.எ. கென்றிசன் தலைமையில் இடம்பெற்ற வெளியீட்டு விழாவில் கலைப்பீடாதிபதி, பொ. பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றுகையில்:

தமிழ் மக்கள் மத்தியில் சமூகவிஞ்ஞானிகள் குறைவாகவே இருக்கின்றார்கள் சிங்களவர்களுடன் ஒப்பிடும் போது மிகக் குறைவாகவே உள்ளனர். இதனை அடுத்து வரும் காலங்களில் எமது சமூகவியல் சிறப்புக்கலைப்பட்டதாரிகள் நிறைவேற்றுவார்கள் என நினைக்கின்றேன் என்றார்.

தொடர்ந்து நூல் அறிமுக வுரையை பொருளியல் துறைத் தலைவர்என். பாலகிருஸ்ணன் உரையாற்றுகையில்;

அண்மைக் காலங்களில் பல்கலைக்கழகங்களில் வர்த்தக முகாமைத்துவ துறையை விடுத்து வேலைவாய்ப்பினை பெறும் நோக்கில் மாணவ சமுதாயம் சமூகவிஞ்ஞான கற்கை நெறியினை நோக்கி நகருவதைக் காணக் கூடியதாய் இருக்கின்றது. மேலும் அரசறிவியல் கற்கை நெறிபற்றி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும், கொழும்பு பல்கலைக்கழக வளாகத்திலும் தவறான அபிப்பிராயங்கள் நிலவிவருகின்றது என்றார்.

அரசறிவியல் கற்கும் மாணவர்கள் அரசியல் நிலையை சமூகத்தில் மாற்றிவிடுவார்கள் என்ற தப்பான அபிப்பிராயத்தை கொண்டுள்ளனர் என்றார்.

நாம் யாழ் பல்கலைகழகத்தில் அரசறிவியலை ஒரு தனித்துறையாக மாற்றுவதற்கு எத்தனித்தபோது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இழுத்தடித்து வருகின்றது என்றார். இது ஒரு ஆபத்தான பாடம், ஆபத்தான துறை என கொழும்பிலுள்ள கல்விமான்களின் கருத்தாகும் என மேலும் கூறினார்.

இவ் நூல் வெளியீட்டு விழாவில் முதற்பிரதியை இலங்கை வங்கி முகாமையாளர் திரு. ஆர். எஸ். நேசராஜாவும், சிறப்புப்பிரதியை மா. நடராஜசுந்தரமும், அடுத்த பிரதியை எ. ஜெ. வி. சந்திரகாந்தனும் பெற்றார்கள், தொடர்ந்து வாழ்த்துரையை யாழ் பல்கலைக்கழக அரசறிவியல் விரிவுரையாளர் எஸ், கே. எஸ். நாதனும் நன்றியுரையை சோ. ஜெயக்குமாரும் ஆற்றினர், (05)

## தொண்டர்களுக்கான கலந்துரையாடல்

(கொழும்புத்துறை)

நல்லூர் அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தின் போது கடந்த வருடம் தொண்டர் சேவையாற்றிய தொண்டர்களைக் கௌரவிக்கும் முகமாகவும், தொண்டர் சேவை சான்றிதழ் வழங்குவது பற்றியும் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் …

## சித்தஆயுர்வேத வைத்தியசாலைதிறப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்குப் பகுதியின் வைத்திய வசதிகள் மிகக்குறைந்த குடத்தனைக் கிராமத்தில் பருத்தித்துறை பிரதேசசபை இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலைக் கிளை ஒன்றைத் திறந்து வைத்துள்ளது. இவ்வைத்தியசாலைக் கிளைத் திறப்பு விழா பருத்தித்துறை பிரதேசசபை குடத்தனை உப. …

## நினைவு கூருகின்றோம்....

## 23-06 1994

1986-ம் ஆண்டு இதேதினத்தில் முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

★ **சின்னவி** (அன்ரனி எலியாஸ்-வண்ணாங்குளம், செட்டிக்குளம்-வவுனியா)

1988-ம் ஆண்டு மட்டு-மாமங்கம் பகுதியில் தேசவிரோதசக்திகள் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**ஈஸ்வரன்** (- - மாமங்கம் - மட்டு)

1990-ம் ஆண்டு மட்டு - கும்புறுமூலைப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட எறிகணை வெடிவிபத்தில் எமைப்பிரிந்த,

**வீனஸ்** (செல்லையா பத்மநாதன் -கிரான்-மட்டு)

மட்டு-உன்னிச்சைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**சீனு** (கிருபைராஜ் கயதாஸ்-பெரியகல்லாறு-மட்டு)

**அலோசியஸ்** (-புவிராஜசிங்கம்-கோட்டைக்கல்லாறு-மட்டு)

**நகுலேஸ்** (கணபதிப்பிள்ளை சோமேஸ்வரன்-கரடியனாறு-மட்டு)

**வேட்டோ-சின்னவன்** (சுப்பிரமணியம் விஜயகுமார்-மண்டூர்-மட்டு)

மணலாறு-செம்மலைப் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**கப்டன் அகஸ்ரின்** (சிங்கராசா சேகர்-பனங்கட்டிக்கொட்டு-மன்னார்)

கிளிநொச்சியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**ரஞ்சித்** (சின்னச்சாமி இராசு-மாயனூர். வட்டக்கச்சி-கிளிநொச்சி)

**நவசீலன்** (- - முரசுமோட்டை, பரந்தன்-கிளிநொச்சி)

**சுந்தரராசா** (- - - - -)

பலாலியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**சுந்தரம்** (நியூட்டன் கமிலஸ் பெரேரா-8-ம் வட்டாரம்,பேசாலை-மன்னார்)

**2-ம் லெப்.ரெனோ** (விநாயகமூர்த்தி திவாகரன்-மறவன்புலோ,சாவகச்சேரி-யாழ்)

இதே பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த,

**லாலா** (கறுப்பன்தவச்சந்திரன்-முழங்காவில்-மன்னார்)

அம்பாறை-அறுகம்பை முகாமில் வைத்து சிறிலங்காப்படையினரால் ரயர்போட்டு எரிக்கப்பட்டுக் கொல்லப்பட்ட பொத்துவில் ஏத்தம் றொட்டைப் பகுதிகளைச் சேர்ந்த தமிழர்கள்.

மட்டு-பெரியபோரதீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட பல்கலைக்கழக விரிவுரையாளர், எல்லைநகர்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட தமிழ்தொழிலாளி.

திருமலை-நிலாவெளிப் பகுதியில் இடம்பெயர்ந்தோர் முகாம்மீது சிறிலங்கா விமானப்படை மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 30 தமிழர்கள்.

னங்களின் பிரதிநிதிகள், மாணவர்கள், ஆசிரியர்கள், உற்பத்திக்குழுக்கள் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## கைப்பணிப் பயிற்சி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் வவுனியா கோட்டம், பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றியத்தின் உதவியுடன் சாளம்பைக்குளம், முள்ளிக்குளம், இளமருதங்குளம். ஆகிய கிராமங்களில் ஆரம்பித்த கைப்பணிப் பயிற்சிவகுப்புகள் முடிவடைந்துள்ளன.

இந்தப் பயிற்சியில் பங்கு கொண்ட பெண்கள் தரமான கைப்பணிப் பொருட்களை உருவாக்கக் கூடிய திறமை பெற்றுள்ளனர். இவர்களால் உருவாக்கப்பட்ட பலவகைக் கைப்பணிப் பொருட்கள் இவர்களின் பாவனைத்தேவையைப் பூர்த்தி செய்வதுடன் இவர்களின் பொருளாதாரத் தேவையில் ஒரு பகுதியையும் நிறைவு செய்யக்கூடியதாகவுள்ளன.

## பிரம்புத் தொழில் ஊக்குவிப்பு

வன்னியிலிருந்து பிரம்பு கொண்டுவந்து பிரம்பை மூலப்பொருளாக கொண்டியங்கும் தொழிலாளர்களுக்கு தொழில் வழங்க எடுத்த முயற்சி பெரும் வரவேற்பை பெற்றதையடுத்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் வன்னியிலிருந்து பிரம்பு கொண்டுவர்து விநியோகிக்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

இவ்வாறு கொண்டு வரப்பட்ட பிரம்புகளை கொள்வனவு செய்ய விரும்புவோர் தாவடியிலுள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கைத்தொழில் பகுதியினரோடு தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஸ்பா கணேசலிங்கம் அவர்களும், விசேட விருந்தினராக தென்மராட்சி கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. கலைவாணன் அவர்களும், கலந்து கொண்டுசிறப்பிக்கவுள்ளனர்.

வைத்து இரவு வேளையில் திருடப்பட்டுள்ளதாகப்புகார் செய்யப்பட்டுள்ளது. இந் நீர் இறைக்கும் இயந்திரங்களின் திருட்டு நடவடிக்கைகள் பற்றி காவல் துறையினர் விசாரணை செய்து வருகின்றனர். (25)

எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவை நல்லூர் இல. 135, பழைய பருத்தித்துறை வீதி தர்மசேவை தொடர்பகத்தில் தொண்டர்களுக்கான ஓர் கலந்துரையாடல் கூட்டம் இடம் பெறும். (21)

விழா பருத்தித்துறை பிரதேசசபை குடத்தனை உப. அலுவலகப் பொறுப்பதிகாரி திருஅ. நடராசா தலைமையில் நடைபெற்றதுபிரதேசச்சபை செயலாளர் திரு. ச. செல்வந்திநாதர் இவ் இலவச சித்த ஆயுர்வேதக் கிளையைச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார். (25)

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## முக்கிய அறிவித்தல்

கிளைக்குழுத் தேர்தலை நடாத்தும் பொருட்டு எமது சங்கத்தின் சகல கிளைகளினதும் வாக்காளர் இடாப்புக்கள் எதிர்வரும் 30-06-94இல் மூடப்பட இருக்கிறது. ஏற்கனவே தங்களது பங்குப்பணம் முழுவதையும் செலுத்தி முடிக்காத அங்கத்தவர்கள் 30-06-94க்கு முன்னர் தங்கள் பங்குப்பண நிலுவையினைச் செலுத்தி ரூபா100/- ஆக உயர்த்தி வாக்காளர் அட்டவணையில் தங்கள் பெயர்களை சேர்த்துக் கொள்வதற்கு வழங்கப்பட்ட இந்த அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

க. வேல்முருகு.
செயலாளர்

(சி-9864)

## விசேட அறிவித்தல்

**யாழ்ப்பாணம்வண்ணை-குளங்கரை மருதடி ஸ்ரீகாமாட்சி அம்பாள் தேவஸ்தானம் (நாச்சிமார் கோவில்)**

மேற்படி ஆலயத்துக்கு சொந்தமான ஆதனத்தில் அமைந்துள்ள வீடுகள், கடைகள் என்பவற்றில் குடியிருப்போர் கவனத்திற்கு.

★ குத்தகை நிலுவைகளை செலுத்தவும்.
★ புதிய குத்தகை பற்றி தீர்மானிக்கவும்.
★ புதிய குத்தகை உடன்படிக்கை நிறை வேற்றவும்.

இன்றிலிருந்து 14 நாட்களுக்குள் மேற்படி ஆலய தர்மகர்த்தாசபை பணிமனையில் பிற்பகல் 4.00 மணியில் இருந்து 6.00 மணிக்குள் தவறாது அதன் செயலாளரை சந்திக்கும்படி கேட்கப்படுகிறீர்கள். தங்களின் சந்திப்பு ஆலய அபிவிருத்திக்கும், ஆலய வளர்ச்சிக்கும் என்பதைக் கருத்திற்கொண்டு தவறாது சந்திக்கும்படி கேட்கப்படுகிறீர்கள்.

பாலசுப்பிரமணியம் தவபாலன்
சட்டத்தரணி,
யாழ்ப்பாணம்.

(8629)

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்



அன்னையின் மடியில்
02 - 01 - 1974

மண்ணிற்காய்
23 - 06 - 1992

## 2-ம் லெப். கங்காமுனி
## (ஜேசுதாசன் பேர்ணாட்சா)

கண்ணில் மலர்ந்து நின்ற எமது கண்ணா!
மண்ணின் தாகத்திற்காய் மறைந்த மாவீரா!
எண்ணும்போது இனிக்குதடா உன் நினைவு!
விண்ணென வலிக்குதடா உந்தன் பிரிவு!
நாளை இம்மண் விடியும்போது நீயிருப்பாய்!
மலரும் வசந்தங்களில் என்றும் நீசிரிப்பாய்!
கண்ணா! உன் களக் கடமை முடிந்தது!
நீ நிம்மதியாய் கண்ணுறங்கு! ..

என்றென்றும் அன்புடன்
அப்பா, சகோதரர், உறவினா, நண்பர்கள்.

15/16, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(8620)

தோர் முகாம்மீது சிறிலங்கா விமானப்படை மேற்கொண்ட தக்குதலில் கொல்லப்பட்ட 30 தமிழர்கள்.

1991-ம் ஆண்டு திருமலை தம்பலகமம் பகுதியில் சிறிலங்காப்படையினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய,

**சுரேஸ்** (பாலசுப்பிரமணியம் ஞானசீலன்-காளிகோயிலடி-திருமலை)

**லோஜன்** (ஞானப்பிரகாசம் லோறன்ஸ்-6-ம் வட்டாரம், சப்பல்துறை-திருமலை)

மணலாறு-மகிண்டியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**சோழன்** (தனபாலசுப்பிரமணியம் இராஜராஜன்-அப்பிளானைவடக்கு, கோப்பாய்வடக்கு-யாழ்)

யாழ்-கட்டுவன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.ரவிராஜ்** (சின்னராசா தவராசா, கும்பமூாவளை, அளவெட்டி-யாழ்)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட வேப்பவெட்டுவானைச் சேர்ந்த கூலி விவசாயியான தமிழிளைஞன்,

1992-ம் ஆண்டு யாழ்-கட்டைக்காட்டில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.சுரேஸ்** (காசிப்பிள்ளை சிவராசா-மல்வத்தை-அம்பாறை)

மட்டு-தும்பங்கேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**மேஜர் பயில்வான்** (சின்னத்தம்பி சிவராசா-முனைக்காடு-மட்டு)

**கப்டன் கீர்த்தி** (கைலாயபிள்ளை உதயகுமார்-எருவில்-மட்டு)

யாழ்-பொன்னாலையில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் விழுப்புண்ணடைந்து சிகிச்சையின்போது மருத்துவமனையில் எமைப் பிரிந்த,

**2 ம் லெப்.கங்காமுனி** (யேசுதாசன் பேணாட்ஷா-மத்தியூஸ்வீதி, குருநகர்-யாழ்)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-9859)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

## சிந்தனைக்கு

மோசடிகளில் மிகக்கொடிய மோசடி தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்வது-

- கொமேலி_யெல்_பெல்லி.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 2024
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 23-06-94
தபால் பெட்டி எண்- 05

## குழப்புகிறார் டி.பி.

இனப்பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா. தனது புதிய கொள்கையை அண்மையில் வெளியிட்டுள்ளார். கொழும்பிலிருந்து வெளிவரத் தொடங்கியுள்ள 'சண்டேலீடர்' என்னும் பத்திரிகையிலேயே இப்புதிய கொள்கை அறிவிப்பும் இடம்பெற்றுள்ளது. 'பயங்கரவாதப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு' என்பதே இனப்பிரச்சினை தொடர்பான அவரது புதிய நிலைப்பாடாகும்.

இலங்கையில் இனப்பிரச்சினை என்பதே இல்லை, பயங்கரவாதப் பிரச்சினையே உள்ளது என சுமார் ஒரு வருட காலமாக அவர் கடைப்பிடித்த கொள்கைகளில் ஏற்பட்டுள்ள ஒரு சிறு மாற்றமே இதுவாகும். பயங்கரவாதப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பதாகும். இக்கொள்கை மாற்றம் ஏன் ஏற்பட்டது என்பது சகலருக்கும் தெரிந்த விடயமே ஆனால் இக்கொள்கை மாற்றம் தேர்தலில் எவ்வளவு வாக்குகளை டி.பி. விஜேதுங்காவிற்குப் பெற்றுக் கொடுக்கும் என்பது தான் எவருக்கும் புரியாத அம்சம்.

டி.பி. விஜேதுங்கா இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை எனக்கூறுவது அவரது பிடிவாதத்தின் வெளிப்பாடே. ஆனால் பயங்கரவாதப் பிரச்சினை தான் உள்ளது எனக் கூறுபவர் அதற்கு இராணுவத்தீர்வு தான் ஒரே வழி எனக் கூறிவந்தது ஏற்புடையவாதம். ஏனெனில் இலங்கையில் இருப்பது பயங்கரவாதப் பிரச்சினை என்றால் அதற்கு இராணுவத்தீர்வே ஒரே வழி என்பதில் எவருக்கும் கருத்து வேறுபாடு இருப்பதற்கு நியாயமில்லை.

ஆனால் டி.பி. விஜேதுங்காவின் தற்போதைய நிலைப்பாடு ஒருவகையில் வேடிக்கையானது. மறுபுறத்தில் குழப்பமானது. ஏனெனில் பயங்கரவாதப் பிரச்சினை ஒன்றிற்கு அரசியற் தீர்வு காண்பதென்பது வேடிக்கையானது. இது உலகிலேயே ஒரு அரசு மேற்கொள்ளும் முதலாவது நடவடிக்கை என்று கூடக் கூறலாம். உலகில் இதுவரை பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுடன் அரசுகளால் பரிமாறப்பட்டவை பணமும், பொருள்களுமே ஒழிய, அரசியல் தீர்வுகள் எவையும் இல்லை. இந்த வகையில் பயங்கரவாத நடவடிக்கைக்கு அரசியற் தீர்வு காண முற்படுவதென்பது வேடிக்கையானதே.

ஆனால் இது சிறிலங்கா ஜனாதிபதியின் வரட்டுத்தனமான பேரினவாதச் சிந்தனையின் வெளிப்பாடே ஆகும். வடக்கு - கிழக்கில் இடம்பெறுவது இனப்பிரச்சினை என்பதை இன்னமும்தான் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைக் காட்ட விளையும் ஒரு நடவடிக்கையாகும்.

## காமினியை அமைச்சராக்கியதற்கு மூன்று அமைச்சர்கள் எதிர்ப்பு

### ஒத்துழைப்பு வழங்காதிருக்க யோசனை

(கொழும்பு)

காமினி திசாநாயக்காவை அமைச்சராக நியமனம் செய்ததைத் தொடர்ந்து மூன்று அமைச்சர்கள் அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொள்வதையோ அல்லது ஒத்துழைப்பு வழங்குவதையோ நிறுத்திவிட ஆலோசனை செய்து வருவதாக அமைச்சரவை வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

காமினி திசாநாயக்காவை அமைச்சராக்கியதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நடவடிக்கையாகவே இவர்கள் இவ்வாறு நடந்துகொள்ள இருப்பதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

அமைச்சர்களான சிறிசேன கூரே, காமினி அத்து கோரளை, றேணுகா ஹேரத் ஆகியோரே இந் நடவடிக்கையில் ஈடுபட இருப்பதாக தெரிய வந்துள்ளது.

## பள்ளிவாசல்களில் ஒலிபெருக்கி பயன்படுத்துவதை தடை செய்க

### -பௌத்த காங்கிரஸ் தலைவர் கோரிக்கை

(கொழும்பு)

முஸ்லிம்கள் தொழுகை நடத்துவதற்காக பள்ளிவாசல்களில் ஒலிபெருக்கிகள் பயன்படுத்தப்படுவது தடுக்கப்படவேண்டும் இவ்வாறு அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது, இக்காங்கிரஸின் தலைவரான டட்லி குணசேகர இது பற்றி மேலும் கூறுகையில் கிராமப்புறங்களிலும் நகரங்களிலும் பள்ளிவாசல்களில் ஒலிபெருக்கி பயன்படுத்தப்படுவது பௌத்த கலாசாரத்திற்கு ஊறு விளைவிப்பதாக இருப்பதாக சுட்டிக் காட்டியுள்ளார். அத்துடன் தினசரி ஐந்து தடைவைகளுக்கு மேல் முஸ்லிம்கள் தொழுகை நடத்தும் ஒலி காற்றில் மேலெழுவது சிறிலங்கா தனியாக பௌத்தர்களுக்கு மட்டும் சொந்தமானது அல்ல என்பதைக் கூறுவது போலுள்ளது.

மேலும் பள்ளிவாசல்களின் ஒலிபெருக்கிகள் சமூக அரசியல் பதற்றங்களை உருவாக்க பயன்படுத்தப்படுவது தொடர்பாக பாகிஸ்தான் அரசு கடுமையாக நடக்கின்றது. பல ஐரோப்பிய நாடுகளும், சிங்கப்பூர் மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளும் கூட பள்ளிவாசல்களில் ஒலிபெருக்கிகள் பயன்படுத்தப்படுவதற்கு எதிராக நடவடிக்கை எடுத்துள்ளன என்றும் டட்லிகுணசேகர தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அத்துடன், முஸ்லிம் வித்தியாலயம், முஸ்லிம் மகா வித்தியாலயம் போன்ற பெயர்களுடன் முஸ்லிம்களுக்கென விசேடமான தனிப் பாடசாலைகள் இருப்பதையும் அரசு முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

## குளம் புனரமைப்பிற்கான நிதியில் 50,000 ரூபா வெட்டப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் ஐந்து குளங்களை புனரமைப்பு செய்வதற்காக சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமொன்று உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு நான்கு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவைக் கொடுத்துள்ளதாக தெரியவருகிறது.

இதேவேளை இந்த ஐந்து குளங்களையும், புனரமைப்பு செய்வதற்காக வெளிநாடொன்றிலிருந்து ஐந்து லட்சம் ரூபா கிடைக்கப் பெற்றதாகவும், ஆனால் இந்நிதியில் இருபத்தைந்தாயிரம் ரூபாவை இந் நிறுவனம் நிர்வாகச் செலவிற்காக ஒதுக்கிக் கொண்டுள்ளது. மீதிப் பணம் தொடர்பாக எந்த காரணத்தையும் தெரிவிக்க இதுவரை அந்நிறுவனம் மறுத்துள்ளது,

இதனால் குளம் புனரமைப்பிற்கென வந்த நிதியை முழுமையாகப் பயன்படுத்தி புனரமைப்பு வேலைகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

## மன்னார்தீவில் புலிகளின் தாக்குதலால் பொலிஸ் நிலையங்களுக்கு மூடுவிழா

(மன்னார்)

மன்னார் தீவுப் பகுதியில் செயற்பட்டு வந்த எட்டு டிலுள்ள பகுதிகளில் விடுதலைப்புலிகள் ஊடுருவல் செய் பொலிஸ் நிலையத்தில் இராணுவத்தினரும், தேசவிரோத

## யாழ் வலயம் 1 பாடசாலை வலைப்பந்துஇறுதிப்போட்டி

யாழ். வலயம் 1 பாடசாலைகள் வலைப்பந்துச் சுற்றும் போட்டியில் நிறைவுப் போட்டிகள் இன்று பிற்பகல் 2. 30 மணிக்கு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் தலைமையில் வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறும். சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். தமிழீழ மாணவர் அமைப்பு மகளிர் பொறுப்பாளர் செல்வி க. வாசுகி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார்.

17 வயதுப் பிரிவில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியை எதிர்த்து வேம்படி மகளிர் கல்லூரியும் 19 வயதுப் பிரிவில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியை எதிர்த்து கன்னியர் மடம் மகாவித்தியாலயமும் விளையாடுகின்றன.

## குழந்தைகள் தத்தெடுப்பு அங்குரார்ப்பண விழா

(கிளிநொச்சி)

ஆயிரம் குழந்தைகள் தத்தெடுக்கும் அங்குரார்ப்பணமும் சுயதொழில் திட்டத்தின் மூன்றாம் ஆண்டுநிறைவு விழாவும் அண்மையில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது

முல்லைமாவட்ட தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் இணைப்பாளர் திரு. சிவனடியார் தலைமையில் இடம் பெற்ற இவ்வைபவத்தில் பல பொது ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களும், அரச நிறுவனங்களைச் சேர்ந்தோரும் உரைநிகழ்த்தினர்

இவ்வுரைகளில் அரசவங்கிகளை விட சுயதொழில் திட்டத்தின் கீழ் குறுகிய காலத்தில் அதிகளவு கடன் வழங்கப்பட்டிருப்பதாகவும், சேமிப்பினை ஊக்குவித்து வருவதாகவும், இராணுவ நடவடிக்கை காரணமாக ஆதரவிழந்த குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவி வழங்குவது பற்றியும் பலராலும் சுட்டிக்காட்டப்பட்டது 1000 குழந்தைகள் தத்தெடுக்கும் திட்டம் பற்றியும் தற்போது தெரிவு செய்யப்பட்ட 20 குழந்தைகளின் பல் துறை வளர்ச்சி பற்றியும் தமிழர் புனர்வாழ்வுக்கழக செயலாளர் விளக்கமளித்தார்.

சுயதொழிலுக்காகக் கடன் பெற்று அதை உரிய காலத்தில்திருப்பிச்செலுத்தியதுடன் சேமிப்பிலும் கூடிய கவனம் செலுத்தியமைக்காக முன்னுரிமை அடிப்படையில் இருவருக்கு தலா 1000 ரூபா பரிசில்கள் வழங்கப்பட்டன.

### நிதி மீளளிப்பு

ஷெப்றா நிதி நிறுவனத்தின் யாழ். பணிமனையில் வைப்பீடு செய்தோர்க்கு முதலாம் கட்ட மீளளிப்பு நடைபெறுகின்றது இதுவரை மீளளிப்புக்கான கோரிக்கையைசமர்ப்பிக்காத வைப்பாளர்கள் 30-06-94க்கு முன் யாழ். பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

## அரிசிக் கொள்வனவில் ஜனாதிபதிபுதியஉத்தரவு

### மோசடிகளை தொடர்ந்துநடவடிக்கை

(கொழும்பு)

சிறிலங்கா பாதுகாப்புப் படையினருக்கும் அகதிமுகாம்கள் மற்றும் உணவுமுத்திரைக்கும் அரிசியைக் கொள்வனவுசெய்வோர் நெல் சந்தைப்படுத்தும் சபையிலேயே அதனைக் கொள்வனவு செய்யவேண்டும் என ஜனாதிபதி டி. பி விஜேதுங்கா உத்தரவிட்டுள்ளார்.

அண்மைக் காலங்களில் இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட அரிசிக் கொள்வனவில் இடம் பெற்ற ஊழல், மோசடிகளை அடுத்தே உத்தரவிடப்பட்டுள்ளதாக மேலும் அவர் கூறினார்.

...ளவில்லை என்பதைக் காட்ட விளையும் ஒரு நடவடிக்கையாகும்.

அதாவது டி.பி. விஜேதுங்கா தான் தலைமைதாங்க முற்படும் பேரினவாத சக்திகளுக்கு தனது நிலைப்பாட்டில் இருந்து தான் இன்னமும் மாறவில்லை, நான் உங்களை ஏமாற்றவில்லை என்பதைக் காட்டும் முயற்சியே இதுவாகும். அவ்வாறானதொரு முயற்சி அவர் மேற்கொள்ளாதுவிட்டால் அவர் இனப்பிரச்சினை விவகாரத்தில் தமிழர்களிடம் இருந்து எதிர்பார்க்கக் கூடிய நன்மையைவிட சிங்களப் பேரினவாதத்திடம் இருந்து தீமையே அதிகம் அடைய வேண்டி வரும் என்பதே யதார்த்த நிலையாகும்.

மறுபளமாக டி.பி. விஜேதுங்காவின் இப்பயங்கர வாதத்திற்கு அரசியல் தீர்வு என்ற அவரது குழப்பமான அறிவிப்பானது அவருக்கு அரசியலில் எதுவித லாபத்தையும் ஈட்டிக் கொடுக்கமாட்டாது. ஏனெனில் 'பயங்கரவாதம்' என்ற நிலைப்பாட்டுடன் இனப்பிரச்சினைக்குத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு தீர்வைச் சிறிலங்கா ஜனாதிபதியால் முன்வைக்க முடியாது ஆகையினால் அதன் மூலம் ஜனாதிபதித் தேர்தலிலோ அன்றிப் பாராளுமன்றத் தேர்தலிலோ அவரினால் வாக்கு வங்கியை நிரப்பிக் கொள்ளவும் முடியாது.

ஏனெனில் வடக்கு - கிழக்கில் இன்று இடம்பெற்றுக் கொண்டிருப்பது தமிழ் இனத்தின் தேசிய இனப்போராட்டமாகும். இதனை ஆயுதம் தாங்கிய ஒரு சிறு குழு நடத்தவில்லை. தமிழ்மக்களே இப்போராட்டத்தை நடத்துகின்றனர். தமிழ்த்தேசிய இன விடுதலைப் போராட்டத்தின் வடிவமே ஆயுதப் போராட்டமாகும். இந்த வகையில் தமிழ்மக்களின் நோக்கமானது சிங்கள தேசத்தின் பிடியில் இருந்து விடுதலை அடைவதே ஆகும்.

இவ்வாறான ஒரு அரசியற் சூழ்நிலையில் இனப்பிரச்சினை தொடர்பான குழப்பமான அணுகுமுறைகள் எவையும், அரசியற்தீர்வையோ, அன்றி அதன் பலாபலன்கள் எதையுமோ கொண்டு வந்து விடப் போவதில்லை. நேர்மையான அறிவிப்புக்களும், தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அதிகாரப் பரவலாக்கல் உள்ளிட்ட உயர்ந்த நிலை அரசியற் தீர்வுமே இனப்பிரச்சினைக்குத் தீர்வாகவும் தமிழ் மக்களினால் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கும்.

ஆனால் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா மட்டுமல்ல, பேரினவாதக் கட்சிகள் எவையுமே இவ்வாறான தெளிவான தீர்வு எதையும் முன்வைத்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முற்படுவார்கள் என எதிர்பார்ப்பதற்கில்லை. ஐ.தே.க மட்டுமல்ல, சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் அதன் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் கூட இந்த வகையில் சிந்திப்பதாக இல்லை. இந்நிலையில் தேர்தலில் வாக்கு வேட்டைக்காக மட்டும் தமிழர் பிரச்சினை பற்றிப் பேசிக் கொள்வதில் எவரும் பயன்பாடு பெற்றுவிடவும் முடியாது-

(மன்னார்)

மன்னார் தீவுப் பகுதியில் செயற்பட்டு வந்த எட்டு பொலிஸ் நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. கடந்த சில மாதங்களில் மன்னார் தீவுப் பகுதியிலுள்ள பொலிஸ் நிலையங்கள் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியமையும், இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் விடுதலைப்புலிகள் ஊடுருவல் செய்திருந்தமையும் இப் பொலிஸ் நிலையங்கள் மூடப்பட்டமைக்கான காரணங்களெனக் கூறப்படுகிறது.

இதே வேளை விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கான தாராபுரம் பொலிஸ் நிலையத்தில் இராணுவத்தினரும், தேசவிரோத புளொட் குழுவினரும் நிறுத்தப்பட இருப்பதாகவும் தெரியவருகிறது.

மேலும் மன்னார்தீவில் இருந்த சோதனைச் சாவடிகளும் பத்திலிருந்து ஐந்தாகக் குறைக்கப்பட்டுள்ளது.

## விதை உருளைக்கிழங்கு விண்ணப்ப முடிவு நீடிப்பு

1994/95 கால போகத்தில் உருளைக்கிழங்கு பயிர் செய்கையில் ஈடுபட இருக்கும் விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை பசுமை விவசாய சேவை நிலையங்கள், வட்டத் தொடர்பாளர் அலுவலகங்கள், விவசாய போதனாசிரியர் விவசாயசேவைநிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 27-ம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது எனவே விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பப்படிவங்களை கமக்கார அடையாள அட்டையுடன் சேர்த்து நேரடியாக தங்கள் பகுதி பசுமை விவசாயசேவை நிலையங்களில் மேற்படி திகதிக்கு முன்னதாக ஒப்படைத்து விண்ணப்பத்திற்கான பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செய்திக் குறிப்பொன்றின் மூலம் தெரிவிக்கின்றது.

## வடமராட்சிகிழக்குபகுதியில் மருத்துவமனை திறப்பு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பகுதி மக்களின் நலன் கருதி விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவின் அனுசரணையுடன் நோயாளர் நலன்புரிச் சங்கம் அங்கு மருத்துவமனை ஒன்றைத் திறந்து வைத்துள்ளது. அன்பு மருத்துவமனை எனப் பெயரிடப்பட்டுள்ள இம்மருத்துவ மனையின் திறப்பு விழாவன்று தேசியக் கொடியை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன் ஏற்றி வைத்தார்.

கடற்புலிகள், நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர், மாவீரர் அன்புவின் தாயார், மருத்துவ பிரிவு பொறுப்பாளர், பொதுச் சுகாதார சேவைப் பொறுப்பாளர், மருத்துவப் பிரிவு ஆலோசகர் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

இம் மருத்துவ மனையில் விடுதலைப் புலிகள் மருத்துவ பிரிவால் பயிற்றுவிக்கப்பட்ட தாதியர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

### மலசல கூடங்கள் அமைப்பு

இடம் பெயர்ந்தோர் முகாம்களிலுள்ள சுகாதாரப் பிரச்சினையைக் கருத்திற் கொண்டு கெற்பலி பண்டிநர் குடியிருப்பில் 50 மலசல கூடங்களை தேசநிர்மாணிகள் அமைத்துள்ளனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பராமரிப்பிலுள்ள 100 குடும்பங்களுக்கே இவ்வாறு ஜெமன் உதவித்திட்டத்தின் கீழ் தேசநிர்மாணிகளால் இம் மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன,

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994 - 06 - 23

### வியாழன் இரவு

08.01 - சொல்லுங்கள் பார்க்கலாம்

08.10 - உரை - ''கவி ஓவியம்''

08.20 - உழைப்போம் உயர்வோம்

''சூட்டடுப்பு'' - சித்திரம்

08.30 - செய்திகள்

08.40 - ஏட்டிலிருந்து காவியப்புகழ் கண்ட வரலாறு என்னும் நூலிலிருந்து ''விடுதலைச்சேனை முன்னேறுகின்றது'' எனும் கட்டுரையின் சில பகுதிகள்

08.50 - மலரும் மொட்டுக்கள்.

### 1994 - 06 - 24

### வெள்ளி காலை

07.02 - மாவீரவணக்கம்

07.15 - விடுதலை கானங்கள்

07.30 - செய்திகள்

07.35 - பத்திரிகைச் செய்திகள்

07.40 - விடுதலை கானங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

## அமெரிக்க அதிபர்கிளின்டன் நிதியுதவிக்கு கோரிக்கை

(வாஷிங்டன்)

தமக்கும், தமது மனைவிக்கும் எதிராக தொடுக்கப்பட்டிருக்கும் வழக்குகளால் ஏற்படும் செலவுகளை சமாளிக்கும் முகமாக நிதியுதவி செய்யும்படி அமெரிக்க அதிபர் பில் கிளின்டன் நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுக்க இருக்கிறார்.

அமெரிக்கர்ஒவ்வொருவரும் தலா500டாலர்வீதம்இச்செலவுகளுக்காக தந்துதவ வேண்டுமென்பது கிளின்டன்கோரிக்கையாக இருக்கும் எனக் கூறப்படுகிறது-

பதவியில் இருக்கும் அமெரிக்க அதிபர் ஒருவர் இவ்வாறான வேண்டுகோள் விடுப்பது இதுவே முதல் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது-

## தென் லெபனான் பகுதிமீது இஸ்ரேல் குண்டுவீச்சு

தென் லெபனானில் ஹிஸ்புல்லாத் தீவிரவாதிகள் நேற்று முன்தினம் நடாத்திய தாக்குதலில் இஸ்ரேலிய படையினர் மூவர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் மூவர் காயமடைந்தனர். இதனைத் தொடர்ந்து இஸ்ரேலிய யுத்த விமானங்கள் லெபனானின் தென் பகுதி மீது பலத்த குண்டு வீச்சுக்களை மேற்கொண்டன.

## அணுசக்தி பரிசோதகரின் விசா அனுமதி நீடிப்பு

சர்வதேச அணுசக்தி ஏஜென்சி அதிகாரிகளுக்கான நுழைவு அனுமதியை வட கொரியா மேலும் இரு வாரங்களுக்கு நீடித்துள்ளது.

இதேவேளை வடகொரியா முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டரிடம் தெரிவித்த யோசனைகளை உடனடியாகசெயற்படுத்த வேண்டுமென அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் வடகொரியாவின் செயற்பாடுகளை நம்ப முடியாமலிருப்பதாக வெள்ளை மாளிகைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## சிறிலங்கா தூதரகம் முன் தமிழக மீனவர் மறியல்

(சென்னை)

சென்னையில் உள்ள சிறிலங்கா துணை தூதரகம் முன் தமிழக மீனவர்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தினர். சுமார் 250 மீனவர்கள் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தின் போது சிறிலங்கா கடற்படை இந்திய மீனவர் மீது நடத்தப்படும் தாக்குதலைக் கண்டித்து கோஷமிடப்பட்டது.

இதன் பின் துணைத் தூதுவரிடம் மகஜர் ஒன்றும் மீனவர்களால் கையளிக்கப்பட்டது.

# தமிழ்குழுக்களின் ஆயுதங்கள் களைய ஐ. தே. க. கூட்டத்தில் ஆராயப்படும்

## பொதுச்செயலாளர் காமினி விஜேசூரிய தெரிவிப்பு

வடக்கு,கிழக்கு மாகாணங்களில் இயங்கும் சகல தமிழ்க் குழுக்களினதும் ஆயுதங்கள் அரசாங்கத்தினால் மீளப் பெறப்படும் என்றும் இதற்கான நடவடிக்கை தொடர்பாக ஆராயப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சிப் பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற ஐக்கிய தேசிய கட்சி அங்கத்தவரிடையே நடைபெற்ற கூட்டத்தில் அவர் மேற்படி கருத்தைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினரும் பொலிசாரும் மட்டுமே ஆயுதங்களுடன் நடமாட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தமிழ் குழுக்கள் ஆயுதங்களுடன் திரிவதையோ அன்றி ஆயுதங்களைவைத்திருப்பதோ எமது கட்சி நடவடிக்கைகளுக்குக் குந்தகமானது.

எனவே இது குறித்து ஐ. தே க. மாநாட்டில் விரிவாக ஆராயப்பட்டு முடிவெடுக்கப்படும் என மேலும் அவர் தெரிவித்தார்.

## விமானப்படை சிப்பாய் சுட்டுக்கொலை

(கொழும்பு)

ஏக்கல விமானப்படை தளத்தில் விமானப்படையைச் சேர்ந்த ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். நித்திரையில் இருந்த விமானப்படை சிப்பாய் ஒருவர் தவறுதலாக துப்பாக்கியை இயக்கியதால் இச்சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

## வடமராட்சிப் பகுதிமீது ஹெலி துப்பாக்கிச் சூடு

(வடமராட்சி)

வல்வெட்டித்துறைதொண்டமானாறு பகுதிகள் மீது சிறிலங்கா உலங்குவானூர்தி ஒன்று துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது.

பலாலியில் இருந்து வந்த உலங்குவானூர்தி நேற்றுக் காலை 7.50 மணியளவில் வல்வெட்டித்துறை நெடியகாடு மற்றும் தொண்டமானாறு பகுதிகள்மீது தொடர்ச்சியாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது. அதேவேளை குண்டுவீச்சு விமானங்களின் நடமாட்டமும் காணப்பட்டது. எனினும் சேதவிபரங்கள் பற்றி எதுவும் அறியப்படவில்லை.

(யே )

## பொலநறுவை எல்லையில் விமான குண்டு வீச்சு

(கொழும்பு)

பொலநறுவை எல்லைப்புறத்தில் விமானப்படை விமானங்கள் குண்டுவீச்சை நிகழ்த்தின. கடந்த வியாழனன்று அங்கொடவில் எனும் பகுதியில் இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

இப்பகுதியில் புலிகளின் நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

## உலக கிண்ண போட்டியில் ஆர்ஜன்ரீனா வெற்றி

(வாஷிங்டன்)

உலகக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டியில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் ஆர்ஜன்ரீனா அணி கிரேக்க அணியை இலகுவாக 4:0 என்ற கோல் கணக்கில்

மற்றோர் போட்டியில் பலம் பொருந்திய அணிகளாகக் கருதப்படும் ஜேர்மனியும் ஸ்பெயின் அணியும் மோதி இரு அணிகளும் தலா ஒரு கோல் போட்டதில் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடி

## வீரவணக்க கூட்டம்

6ஆம் மாதங்களில் வீரச்சாவடைந்த வலிகாமக்கோட்டம் உடுவில்/தெல்லிப்பளை வட்டத்தைச் சேர்ந்த மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்றிரவு 8.00 மணிக்கு தாவடி பத்திரகாளி அம்மன் கோயிலடியில் நடைபெறவுள்ளது. கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## கணித மூலவள நிலையம் 1-ம் ஆண்டு நிறைவு விழா

(நமது நிருபர்)

கணித பாடத்தினை சகல மாணவர்களும் இலகுவாக விளங்கிக் கொள்ளவும், பல புதிய புதிய சிந்தனைகள் மாணவர் மத்தியில் உருவாகுவதற்கும் கணித மூலவள நிலையம் உறுதுணையாக அமைகின்றது. கணித எண்ணக் கருக்களை மையமாக கொண்டே விஞ்ஞான கண்டுபிடிப்புகள் அமைகின்றன. எனவே கணித பாடத்தின் முக்கியத்துவத்தினை உணர்ந்து அதனை மிகவும் கவர்ச்சியான முறையில் மாணவரிடையே புகுத்திட ஆசிரியர்கள் முயலவேண்டும்.

இவ்வாறு நேற்றுக் காலை உடுவில் மகளிர் கல்லூரியின் கணித மூலவள நிலையத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரை நிகழ்த்திய யாழ். கல்வி வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் திரு. கந்தசாமி தெரிவித்தார்.

கல்லூரி மாணவி வபித்தா தில்லையப்பலம் தலைமையில் நடைபெற்ற இந்நிறைவு விழாவில் கல்லூரி அதிபர் வரவேற்புரையை நிகழ்த்தினார். செல்வி ந. காந்தரட்ணம் ஆங்கிலத்தில் மிகச் சிறப்பாக உரை நிகழ்த்தி அனைவரது பாராட்டுதல்களையும் பெற்றுக் கொண்டார்

ஆண்டுபத்து. பதினொன்று மாணவர்களின் கணித விஞ்ஞான வினாவிடைப் போட்டியும் ஆண்டு 12 மாணவர்களின் ''வினோத வழக்கு'' எனும் விஞ்ஞான நாடகமும் இடம்பெற்றது. இந்நாடகத்தில் ஐதரசன் தம்பி முதலாம் கூட்டத்தினருக்கா அல்லது ஏழாம் கூட்டத்தினருக்கா என்ற விவாதம் இடம்பெற்றது புதிய பாணியில் மிகச் சிறப்பாக நடைபெற்ற இவ் வழக்கிற்கு காபன் நீதிபதியாக கடமையாற்றினார்.

விஞ்ஞானமே கற்காதோர்

இசைக்கப்பட்டது. கல்லூரி மாணவர்களால் இயற்றப்பட்டு மெட்டமைத்து இசைக்கப்பட்ட இப்பாடல் கணிதத்தில் உள்ள எண்களையும் சதுர, செவ்வக, முக்கோணி எண்களையும் மையமாக வைத்து இயற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் திரு. அ. குமாரவேல் நடுவராக பணியாற்றிய பட்டிமன்றம் இடம்பெற்றது. ''நவீன உலகில் வாழ்க்கையை வளம் படுத்துவது கணிதமா? விஞ்ஞானமா?'' எனும் தலைப்பில் ஆண்டு எட்டு, ஒன்பது மாணவிகள் பங்கேற்றனர். சபையோர் மெய் சிலிர்க்கும் வகையில் இடம்பெற்ற இப் பட்டிமன்றத்தில் மாணவிகளின் வாதத் திறமையை நடுவரே பாராட்டியது குறிப்பிடத்தக்கது.

அடுத்து இங்கே ஒரு''மை'' எனும் நாடகம் ஆண்டுபத்து மாணவிகளால் தயாரித்து மேடையேற்றப்பட்டது. இன்றைய உலகில் ஓசான் படலங்களில் ஓட்டை விழுவதனை மையமாகக் கொண்டு இயற்கை மாசடைவதால் ஏற்படுகின்ற விளைவுகளை சுட்டிக்காட்டி அமைந்திருந்த இந் நாடகம் சபையோரின் சிந்தனையை தூண்டியதாக அமைந்திருந்தது.

இறுதியாக ஆண்டு11 மாணவிகளின் ''புள்ளி விபரவியல்'' எனும் தலைப்பிலான வில்லுப்பாட்டு இடம்பெற்றது கணிதத்தில் புள்ளிவிபரவியல் எனும் பகுதியை ஆசிரியர் மாணவர்களுக்கு கற்பிப்பதாக அமைந்திருந்தது. இந்த வில்லிசை சபையோரை வயிறு குலுங்க சிரிக்க வைத்த இவ் வில்லிசையினை மிகவும் நகைச்சுவையுடன் இலகுவாக மாணவர் மனதில் பதியும்படி அமைக்கப்பட்டிருந்தது சிறப்பாக அமைந்தது. கலைநிகழ்வினைத் தொடர்ந்து விஞ்

சீதனம்வாங்குதல்இனியும்தொடர்ந்தால்
இயந்திர வாழ்வே இங்கினித் தங்கும்

## நுவரெலியா மேயருக்கு எதிராக மத்திய மாகாணசபை தீர்மானம்

### ஆளும் ஐ. தே. கவிற்கு படுதோல்வி

(கொழும்பு)

மத்திய மாகாண சபையில் எதிர்க்கட்சியினர் கொண்டு வந்த பிரேரணையொன்றுக்கான இரகசிய வாக்கெடுப்பில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடைந்துள்ளது.

நுவரெலியா அரசாங்க செயலகம் தீப்பற்றி எரிந்தது தொடர்பாக நுவரெலியா நகர பிதா தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என்றும் இவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் உறுப்பினர் கே. டி எம். விக்கிரம சிங்கா கொண்டுவந்த பிரேரணை இரகசிய வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது பிரேரணை வெற்றியீட்டியது.

நேற்று முன்தினம் நடைபெற்ற மத்திய மாகாணசபை கூட்டத்தில் வாக்கெடுப்பு நடைபெற்றதாகவும் இக் கூட்டத்திற்குப் பிரதித் தலைவர் புத்திர சிகாமணி தலைமை வகித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## உணவுப் பொருள்களுடன் நாளை கோமாரி வருகிறது

(வடமராட்சி)

'கோமாரி' கப்பல் 3ஆயிரத்து 300 மெட்ரிக்தொன் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக் கொண்டு நாளை வெள்ளிக்கிழமைகாலை பருத்தித்துறை துறைமுகம் வந்து சேரும்.

இக்கப்பலில் அரிசி 2ஆயிரம் மெட்றிக் தொன், மைசூர்ப் பருப்பு 500மெட்றிக் தொன், பால்மா100மெட்றிக் தொன், உழுந்து 75மெட்றிக் தொன், றவை 100 மெட்றிக்தொன், மல்லி 50 மெட்றிக் தொன், நூடில்ஸ்100மெட்றிக் தொன் தேயிலை30மெட்றிக் தொன், பெருஞ்சீரகம் 10 மெட்றிக் தொன் ,நற்சீரகம் 10மெட்றிக் தொன், வெந்தயம் 10 மெட்றிக் தொன், உள்ளி 20 மெட்றிக் தொன். சலவை சவர்க்காரம் 50 மெட்றிக் தொன், வாசனை சவர்க்காரம் 50மெட்றிக் தொன், டீசல் 86 பரல் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகள், தபால் பொதிகள் என்பனவும் எடுத்துவரப்படுகின்றன.

(யோ)

## வீரச்சாவு

தார்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் கதிரவன் / கோபு (பாலசிங்கம் சதீஸ் குமார் 54/11, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி யாழ்ப்பாணம்) என்னும் போராளிக்கு தமிழீழவிடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

இம் மாவீரனது வித்துடல் கிடைக்காததால் இவரின் திருவுருவப்படம் இவரது இல்லத்திலிருந்து இன்று மாலை 3.00 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு சுண்டுக்குளி விநாயகர் சன சமூக நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்கு வைத்

## கருத்தரங்கு

யாழ் பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தினரால் இன்று மாலை 4.00 மணிக்கு சீதனத் தடைச்சட்ட அமுலாக்கல் குறித்த முன்னோடிக் கருத்தரங்கு யாழ் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

## இலவச

அமைச்சர்களான காமினி திசாநாயக்கா, றொனி டி மெல், ஜனாதிபதியின் ஆலோசகர்கள் மற்றும் திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் கலாநிதி விக்கிரம வீரசூரிய ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

விரைவில் நடைபெறவுள்ள

## மாதாந்த கலை நிகழ்ச்சி

கைதடி நாவற்குழி தெற்கின் கிராமிய பாசறையை யொட்டிய மாதாந்த கலை நிகழ்ச்சி இன்று இரவு 7.00 மணிக்கு கைதடி நாவற்குழி தெற்கு மகாவிஷ்ணு ச. ச. நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்ற உள்ளார்கள். கலை நிகழ்வும் தொடர்ந்து இடம்பெறும்.

## இறைமக்கள் கருத்தரங்கு

சுண்டிக்குளி புனித யோவான்தேவாலய மண்டபத்தில் நாளை மறுதினம்இறைமக்கள் கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது. இக் கருத்தரங்கில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முதுநிலைவிரிவுரையாளர்களான அருட்கலாநிதி ஐ,எச்,விக்டர்மற்றும் அருட்கலாநிதி அன்டன்மத்தாயஸ் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்,

## உணவு முத்திரை

அரிபாலை தென்கிழக்கு ஜே-89 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கு 9வது தொடர் உணவு முத்திரை கடந்த 20ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் மணிப்புரி 2ஆம் குறுக்குத் தெருவில் உள்ள கிராம அலுவலர்காரியாலயத்தில் வழங்கப்படும்.

(24)

ணைத்திலும் நடந்த போட்டி யில் ஆர்ஜன்ரீனா அணி ரேக்க அணியை இலகுவாக :0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது. இந்த கோல் களில் ஒன்று ஆர்ஜன்ரீனா அணித் தலைவர் மரடோனா வினால் போடப்பட்டது றிப்பிடத்தக்கது.

இரு அணிகளும் தலா ஒரு கோல் போட்டதில் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. நைஜீரியா-பல்கேரியா அணிகளிடையிலான போட்டியில் நைஜீரியா 3:0 என்ற கோல் கணக்கில் இலகுவாக வென்றது.

# ஏழு அரச வாகனங்கள் சேதமாக்கப்பட்டன

(கொழும்பு)

மேல்மாகாண முதலமைச்சரினால் பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்த மேல்மாகாண அமைச்சரான பிரேமரத்ன குணசேகராவுக்கு வழங்கப்பட்டிருந்த வாகனம் உட்பட அரசாங்கத்துக்குச் சொந்தமான ஏழு வாகனங்கள் அண்மையில் இனம்தெரியாத நபர்களினால் சேதமாக்கப்பட்டன.

கடந்த புதன்கிழமை நள்ளிரவுக்குப்பின் இச் சம்பவம் நடைபெற்றுள்ளதாக பொலிசார்தெரிவித்துள்ளனர். வாகனங்களுக்கு ஏற்பட்ட சேதங்களின் பெறுமதி ஐந்துலட்சம் ரூபாயாகும். திரு. குணசேகரா உபயோகித்த இந்த வாகனத்தின் முன் கண்ணாடி அடித்து நொருக்கப்பட்டுள்ளதாகவும் அதன் கஸட் றேடியோ, பக்க கண்ணாடிகள் அகற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வாகனங்கள் சேதமாக்கப்பட்டதற்கு அரசியல் பின்னணியுள்ளதா அல்லது கொள்ளை அடிக்கும் நோக்குடையதா என்பது குறித்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

யாழ் **ஸ்ரீதரில்**

இன்று மட்டும்

Aronold Schwarzenegger

நடித்த

**PREDATOR**

நாளை முதல்

**JURASSIC PARK**

தினசரி 4 மணி, 6 மணி

சனி, ஞாயிறு 10.30 மணி

(சி-9867)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

சிறப்பாக நடைபெற்ற இவ் வழக்கிற்கு காபன் நீதிபதியாக கடமையாற்றினார்.

விஞ்ஞானமே கற்காதோர் கூட இலகுவில் விளங்கிக் கொள்ளும் வகையில் இரு தரப்பினருக்குமிடையே விவாதம் இடம்பெற்றது. இறுதியில் இரு கூட்டத்தினருக்குமே ஐதரசன் தம்பி உரியவர் என்ற தீர்ப்பை காபன் வழங்கினார்.

இதனை அடுத்து கல்லூரி விடுதி மாணவர்களின் ''எண் கோலங்கள்'' எனும் பாடல் மாணவர் மன்றில் புதுமைப்படி அமைக்கப்பட்டிருந்தது சிறப்பாக அமைந்தது. கலைநிகழ்வினைத் தொடர்ந்து விஞ்ஞான உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி வேதநாயகம் சிறப்புரையையும் கல்லூரி கணித ஆசிரியர் திரு. சதீஸ்குமார் பாராட்டுரையினையும் நிகழ்த்தினர். தொடர்ந்து கல்லூரி மாணவி உதயா ஹரிச்சந்திராவின் நன்றியுரையுடன் விழா நிறைவு பெற்றது. (ச)

# காவல்துறையினரால் திருட்டு பொருள் மீட்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை காவல்துறையினர் தும்பளையில் வீடொன்றில் களவாடப்பட்ட பொருள்களையும் இரண்டு சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

பருத்தித்துறை தும்பளை க. கிருஷ்ணபிள்ளை என்பவரது வீட்டில் இருந்து 3 ஆயிரத்து 300 ரூபா பெறுமதி வாய்ந்த துவிச்சக்கரவண்டி ஒன்றையும், கதிரை ஒன்றையும் திருடியவர்களையும் திருட்டுப் பொருள்களையுமே மீட்டுள்ளனர்.

இதுபற்றி காவல்துறையினர் புலன்விசாரணை செய்து வருகின்றனர். (யோ)

---

## சிறுவர்களை

தொழிற்சாலைகளிலும் சுரங்கங்களிலும் வேலை செய்து வருகின்றனர் எனத் தெரிவித்துள்ளது.

மேற் குறிப்பிட்ட சர்வதேச சுதந்திரதொழிற்சங்கங்களின் சம்மேளனம் உலகிலே மிகப் பெரியதொரு தொழிலாளர் ஸ்தாபனமாகும்.

---

## மகாபொல

டக்கம் இவ் அதிகரிப்பு நடைமுறைக்கு வருகிறது குறிப்பிட்ட காலத்திற்குள் பட்டப் படிப்பை பூர்த்தி செய்ய முடியாது போன பட்டதாரி மாணவர்களுக்கு எதிர்வரும் ஜூலை முதல் மாதாந்தம் 500 ரூபா விசேட கொடுப்பனவு வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

---

## எந்தத்

தாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நடைபெற உள்ள பாராளுமன்றத் தேர்தல் அல்லது ஜனாதிபதி தேர்தல் அல்லது மாகாண சபைகளை கலைத்துவிட்டு தேர்தல் நடைபெற்றாலும் கூட தனது கட்சி முகம் கொடுக்கத் தயாரான நிலையில் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது கட்சிக்கு தொகுதி ரீதியான அமைப்பாளர் தெரிவு நடைபெறுவதாகவும் மிக விரைவில் இவ் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு விடும் எனவும் அவர் தெரிவித்தார்.

---

## அனுப்பப்படும்

உறுதியைப்பெற மேற்படி ஐரோப்பா அகதிகள் நலன் காக்கும் குழுக்கள் இக் கலந்துரையாடலின்போது முயற்சிக்கும் எனக் கூறப்படுகிறது.

செல்லப்பட்டு சுண்டுக்குளி விநாயகர் சன சமூக நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டம் இடம்பெறும் இதனைத் தொடர்ந்து இறுதி இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவுக் கல் நாட்டப்படும்.

---

## எதிர்க்கட்சியின்

செய்திதொடர்பாக கருத்து வெளியிட்ட பி. பி.ஸி செய்தியாளர் தெரிவித்தார்.

தேர்தலில் ஐ.தே.க வெற்றி பெற்றால் அவரே ஜனாதிபதியாக பின்பு தெரிவாவது உறுதியாகிவிடும்.

ஐ.தே.க. ஒரு துணிச்சலாக இம்முடிவை எடுத்துள்ளது எனக் கூறமுடியும். ஜனாதிபதித் தேர்தலை முன்னதாக நடத்தின் ஜனாதிபதி தேர்தலுக்காக பிரசாரம் செய்யக்கூடிய திறமை விஜேதுங்காவிடம்இல்லை. அதுவும் எதிரணி தரப்பில் சந்திரிகா நிறுத்தப்பட்டால் அவருடனான நேரடி மோதல் விஜேதுங்காவிற்கு சாதகமாக இருக்கமாட்டாது. பொதுத்தேர்தலாயின் ஐ. தே. க. கட்சி ரீதியில் சிறுபான்மையினர் ஆதரவை பெறக்கூடியதாக இருக்கும் என கட்சி நம்புகிறது.

எனினும் எதிர்க்கட்சியினரோ தாம் எதற்கும் தயாராக இருப்பதாககூறுகின்றனர். சுதந்திரக் கட்சியின் தலைமை யாருக்கு என்ற நிலை அங்கு காணப்படும் அதேசமயம் அக் கட்சி தேர்தலில் ஏனைய எதிர்க் கட்சிகளுடன் கூட்டு சேர்ந்து போட்டியிடுவதால் தேர்தலில் வெற்றிபெற்றால் கூட ஏனைய கட்சிகளுடன் ஆசனங்கள் பகிர்வதில் கவனம் செலுத்தவேண்டியிருக்கும் எனவும் பி. பி. ஸி. செய்தியாளர் ஜோர்ஜ்ஆர்னி மேலும் தெரிவித்தார்.

சூரிய ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

விரைவில் நடைபெறவுள்ள தேர்தல் தொடர்பாக வழங்கப்படும் சலுகையில் ஒன்றாகவே இவ் அறிவிப்பு இருப்பதாகவும் தெரியவருகின்றது.

இதே வேளை இவ்வாறு இலவச அரிசி விநியோகம் தொடர்பாக ஆரம்ப நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு பிரதேச செயலர்களுக்கு விரைவில் அறிவுறுத்தல் வழங்கப்பட இருப்பதாகவும் மேலும் தெரியவருகின்றது.

உள்ள கிராம அலுவலர்காரியாலயத்தில் வழங்கப்படும். (24)

---

## 40 தமிழர்

பட்டனர். அன்று இரவு விடுதியை முற்றுகைபிட்ட பொலிசார் விசாரணையின் பொருட்டு இவர்களை கைது செய்தனர்.

இவ்வூழியர்கள் மேற்படி உணவு விடுதியில் பல வருடங்களாக பணியாற்றியவர்களாவர்என்பது குறிப்பிடத்தக்கது.

# 31-ம் நாள் நினைவலையும் அந்தியேட்டிக் கிரியையும்



மலர்வு:

07 - 05 - 1937

உதிர்வு:

24 - 05 - 1994

## திருமதி அன்னம்மா வேதநாயகம்

கோப்பாய் மத்தி லைடன் பாம் வீதியிலுள்ள அன்னாரது இல்லத்தில் 23-06-1994-ல் நடைபெறவுள்ள மேற்படி அந்தியேட்டிக் கிரியையில் கலந்து கொண்டு அன்னாரின் ஆன்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறும் உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

லைடன்பாம் வீதி,
கோப்பாய்.
(சி-9866)

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மற்றும் உறவினர்